விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 247 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 07 செவ்வாய்க்கிழமை (23.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# பயங்கரவாத சட்டத்தை கையிலெடுக்கும் ரணில்!

## அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி



(கொழும்பு)

அண்மையில் கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் வசந்த முதலிகே உட்பட மூவரை 90 நாட்களுக்கு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அனுமதி வழங்கியுள்ள நிலையில் இம் முடிவுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன. *(12 ஆம் பக்கம் பார்க்க)*

### அரசாங்கம் ஒத்துழைத்தால்
## பேக்கரி உற்பத்திகளின் விலைகளைக் குறைக்கலாம்
### பேக்கரி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

அரசாங்கம் பேக்கரி உரிமையாளர்களுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கினால் ஒரு இறாத்தல் பாண் 50ரூபாயாலும் ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையை குறிப்பிடத்தக்க அளவிலும் குறைக்கலாம் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார். 11

### வவுனியாவில்
## 10 இலட்சம் ரூபாய்க்கு ஏலம்போன மாம்பழம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் 10 இலட்சம் ரூபாய்க்கு மூன்று மாம்பழங்களும், ஒரு மாலையும் ஏலம் போன நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா மரக்காரம்பளை வீதி கணேசபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய அலங்கார திருவிழாவின் ஆறாம்நாள் திருவிழாவின் போது இறைவனுக்கு படைக்கப்பட்ட மூன்று மாம் பழங்களும் , ஒரு மாலையும் ஏலத்தில் 11

## இலங்கையுடன் இணைந்து செயற்பட அதானி நிறுவனம் ஆர்வம்
### சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின்



(கொழும்பு)

அதானி நிறுவனம் இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருங்கி செயற்படுவதாகவும் துறைமுக முனையத்தில் இணைந்து பணியாற்றுவதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளதாக த. இன்டியன் எக்ஸ்பிறஸ் செய்தி வெளியிட்டுள் 11

### பயங்கரவாதத் தடைச்சட்டம்
## நாட்டை பாரிய சிக்கலுக்குள் தள்ளும்
### பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்



(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் நாடு தேசிய ரீதியில் மட்டுமின்றி சர்வதேச ரீதியிலும் பாரிய 11

## இந்திய மீனவர்கள் 10 பேர் கைது

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட தமி 11

### மே - ஜூலையில் இடம்பெற்ற
## வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் தொடர்பில் சாட்சி வழங்கத் தயார்
### உதய கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் கடந்த மே 9 ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை நடந்த வன்முறைகள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் 11

### பல்கலைக்கழகங்களை
## செப்டம்பரில் திறக்க முடிவு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து பல்கலைக்கழகங்களையும் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் செப்டம்பர் மாதம் திறக்க நடவடிக்கை எடுக் 11

## ஜனாதிபதியின் அழைப்பை மீண்டும் நிராகரித்தார் சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் நேற்று பகல் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் இதில் கலந்துகொண்டிருந்தார். சர்வ கட்சி அரசாங்கத்திற்கான வேலைத்திட்டம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி 11



## கொரோனா

| | |
|---|---|
| பலி | 06 |
| தொற்று | 103 |

(கொழும்பு)

நாட்டில் நேற்றும் 06 கொரோனா மரணங் 11

### வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரை
## பயங்கரவாத சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய அனுமதி

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் பயங்கரவாத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்ய ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெல சிறி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில்

# நாவலர், சேர் பொன்.இராமநாதன் உருவச்சிலைகள் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் வீற்றிருக்கும் பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி இன்று நடைபெறவுள்ளது.

இதனையொட்டி ஆலய வளாகத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரதும் சைவப் பெருவள்ளல் சேர் பொன். இராமநாதன் அவர்களினதும் உருவச் சிலைகள் திறந்து வைக்கப்படுவதுடன் வேதாகமப் பாடசாலை ஆரம்ப நிகழ்வு மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு, சிறப்புரைகள், மஞ்சத் திருவுலா என்பனவும் இடம்பெறும். (4)

அதிக விலைக்கு முட்டை விற்பனை

# 3 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைமைச் செயலகத்தின் பணிப்புரைக்கு அமைவாகவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் கட்டளைக்கு இணங்கவும் யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபை பொறுப்பதிகாரியின் மேற்பார்வையின் கீழ் கோழி முட்டைக்கான உயர்ந்த பட்ச கட்டுப்பாட்டு விலை தொடர்பாக வெளியான வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய நேற்று சுற்றிவளைப்பு நடவடிக்கையானது அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் யாழ்ப்பாணம், கல்வியங்காடு, திருநெல்வேலி போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன், அவ் வர்த்தமானி அறிவித்தலை விட அதிக விலைக்கு கோழி முட்டை விற்பனை செய்த 3 வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் காலங்களில் அதனை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (4-7,33)


10ஆம் ஆண்டு

## நினைவு தினம்

அமரர் அருளம்பலம்
அருந்தவம் (கட்டி)

தோற்றம்:-08.12.1951
மறைவு:- 12.08.2012
திதி: 23.08.2022



ஆண்டுகள் பத்தாயினும் நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அம்மாவே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள்! எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

தகவல்: குடும்பத்தினர்
பாடசாலை வீதி,
தொண்டைமானாறு.

(12469)

வீடுகளுக்கு வந்து அனைத்து விதமான வேலையும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:- (12520)
076 570 4018

பணிப் பெண்
## தேவை

யாழ்.நகரில் வீட்டு வேலைக்கு
பணிப் பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- (C-4775)
077 644 6514

## ஏல விற்பனை

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பயன்பாட்டிலிருந்த தற்போது பயன்படுத்த முடியாத பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம் : பாடசாலை வளவு
காலம் : 2022.09.06 (செவ்வாய்)
நேரம் : காலை 10.00

(12522) அதிபர்


## மரண அறிவித்தல்

### திருமதி தங்கவடிவேலு பரமேஸ்வரி

பிறப்பு 17.05.1945 இறப்பு 22.08.2022



தாவளை இயற்றாலை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கவடிவேலு பரமேஸ்வரி அவர்கள் நேற்று (22.08.2022) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ் சென்ற மயில்வாகனம் - செல் லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மயில்வாகனம் தங்கவடிவேலுவின் அன்பு மனைவியும் விஜிதா, விஜயானந்தா (பிரான்ஸ்), வினோஜிதா (ஜேர்மனி), விஜயலலிதா (கனடா), விஜயரூபன் (ஜேர்மனி), விஜயசங்கர் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திரபாலன், தர்சினி (பிரான்ஸ்), இராசலிங்கம் (ஜேர்மனி), கிருபாகரன் (கனடா), வினோதினி (ஜேர்மனி), மாலதி (ஆசிரியை - யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரணவநாத் (UK), கோபிநாத் (SLTC North East Developer Campus), பிரதீபன், ஹம்சா, ராகவி, தாமிரன், ஆதவன், சரண், ரிஷி, அனுஷா, யதுஷா, கபிஷன், அபிநயன், அபிஷன், அகல்யன், தலோமிகா, கஜானி, அஹர்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் சிவலோகதேவியின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரன், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.08.2022) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தச்சகாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவளை,
இயற்றாலை, கொடிகாமம். (12523)

தகவல்: குடும்பத்தினர்
077 239 2124

முதலாம் ஆண்டு

## நினைவஞ்சலி



மண்ணுலகு 24 . 09 . 1938
விண்ணுலகு 03 . 09 . 2021

அமரர் தியாகராஜா நாகராஜா

திதி: அபரபக்க துவாதசி 23.08.2022

மண்ணோடு உங்கள் பூவுடல்
மறைந்துவிட்டாலும் - நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை!
பாசமான நினைவுகளை
எம்மிடமே விட்டுச் செல்கின்றீர் ஐயாவே!

பருத்தித்துறை புலோலி கிழக்கு (தற்போது புலோலி வடக்கு) பர்வதவர்த்தனி அம்பாள் சமேத பசுபதீஸ்வரர் ஆலயத்தில் (பருத்தித்துறை சிவன் கோயில்) தர்மகர்த்தாவாக 50 வருடத்திற்கு மேலாக சிவதொண்டாற்றி சிவபதமடைந்த அன்னாரின் 1ஆம் ஆண்டு நினைவுதினம் 23.08.2022 செவ்வாய்க்கிழமை இன்று அன்னாரின் இல்லத்தில் அனுஷ்டிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:- சிவன் ஆலய தொண்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## நீங்கா நினைவுகளுடன்



## இராஜலிங்கம் மகாலட்சுமி
## "லிங்கம்மா"

கார்த்திகை மழையைப் போல
கருணை மழையே நீ தான்!
காத்திடும் தெய்வம் போல
காத்தவள் எம்மை நீ தான்
வார்த்தையில் சொல்ல முடியா
வாழ்க்கை தந்தவள் நீதான்!
பார்த்தவர் வியக்க வளர்த்தாய்:
பார்க்க நீதான் இல்லை!

நீராவியடியில் பாரு
நிமிர்ந்ததுன் பெயரில் இல்லம்.
பேரோடு வாழ்ந்த உந்தன்
புகழினை மறக்காது உள்ளம்.
நீர் ஆவி ஆகும்: உந்தன்
நினைவுகள் நீங்கிப் போகுமா?
பேர் காவித் திரியும் எங்கள்
பெருமையே நீதான் அம்மா!

ஊரெல்லாம் உன்னை மெச்ச
உத்தமி போல வாழ்ந்தாய்!
யாரெல்லாம் கேட்டால் அவர்கள்
யாவர்க்கும் உதவி செய்தாய்!
போர்க்கால இடரில் கூட
பிள்ளை போல் பலரைக் காத்தாய்!
நேற்றைமைக் காத்த தாயே:
நீயெங்கே விட்டுப் போனாய்?

கண்களை மூடித் திறக்க
கண்முன் நீ தான் அம்மா!
திங்களைப் போல ஒளிரும்
திருமுகம் நீயே அம்மா!
எங்களை வழி நடத்த
இருக்கின்ற ஒருத்தி அம்மா!
உங்களை மறந்து வாழ
எப்படி முடியும் அம்மா!

தோற்றம்- 27.08.1934
மறைவு - 21.08.2014

நிஜமாய் பிரிந்தாலும் நினைவில் பிரியாத
அம்மாவின் நினைவுகளுடன்;

**பிள்ளைகள்.**

(12494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்டப் போட்டி
## சண்டிலிப்பாய் அணி சம்பியன்



யாழ். மாவட்டச் செயலகத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டு பிரிவினரால் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 52:34 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-90)

# மன். பிறீமியர் லீக் இறுதிப் போட்டி
## கிண்ணம் வென்றது MARTYRS அணி



மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் உள்ள காற்பந்தாட்ட கழகங்களை உள்ளடக்கி பத்து அணிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற மன்னார் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை நானாட்டன் பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்றது. மன்னார் MARTYRS அணி மற்றும் ISLAND FC அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய நிலையில் இரு அணிகளுக்குமான இறுதிப் போட்டி இடம்பெற்றது. விறுவிறுப்பாக இடம்பெற்ற குறித்த போட்டியில் இரு அணியினரும் தலா ஒரு கோல் வீதம் பெற்றிருந்த நிலையில் தண்ட உதை மூலமாக வெற்றி வாய்ப்பு வழங்கப்பட்டது. தண்ட உதையில் அதிக கோல்களை பெற்று MARTYRS அணி வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. (4-285)






கப்பிட்டல் மகாராஜா குழுமம் மற்றும் IPL Brand (Pvt) Ltd இணைந்து நடத்திய 16 அணிகளைக் கொண்ட யாழ்., கிளிநொச்சி பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயம், வாதரவத்தை விக்னேஸ்வர கல்லூரி முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. அத்துடன் குறித்த இரு அணிகளிலும் வாதரவத்தையைச் சேர்ந்த வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2625

### சந்துரு




### மேனகா




### ரஞ்சன்




### சுகந்தி




### பிரவீன்

FAIL என்ற வார்த்தைக்கு 'FIRST ATTEMPT IN LEARNING', அதாவது 'கற்றுக்கொள்வதற்கான முதல் வாய்ப்பு'

END என்பதற்கு 'EFFORT NEVER DIES'. அதாவது 'முயற்சி ஒரு போதும் தோற்பது இல்லை'

NO என்ற வார்த்தைக்கு NEXT OPPORTUNITY, அதாவது 'அடுத்த வாய்ப்பு'

என்பது பொருளாகும்..!!!

### றாயினி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மீண்டும் களமிறங்கிய போராட்டக்காரர்கள்



(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யக்கோரியும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் பொலிஸாரினால் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதற்கு எதிராகவும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு கொம்பனி தெரு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இப்போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டத்தின் போது ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையில் நுழைந்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டுக்களின் கீழ் பொலிஸாரினால் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

எனவே இவ்வாறான கைது நடவடிக்கைகளுக்கு எதிராகவே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி)

# அனைத்து தரிசு வயல்களிலும் பெரும்போக பயிர்ச்செய்கை

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் 8 மாவட்டங்களில் உள்ள அனைத்து தரிசு வயல்களிலும் பெரும் போகத்தில் பயிரிடப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, அம்பாறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள தரிசு நிலங்கள் அனைத்திலும் பயிரிடப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது சுமார் 100,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படாத தரிசு நெல் வயல் உள்ளது. அவற்றில் பெரும்பாலானவை மேல் மாகாணத்தில் அமைந்துள்ளன.

நாட்டில் சுமார் 50,000 ஏக்கர் தரிசு வயல்களில் பயிர் செய்ய முடியும் மற்றும் மீதமுள்ள தரிசு வயல்களில் பயிர்செய்கை செய்ய முடியாத நிலையில் உள்ளது.

எனவே, விவசாயம் செய்யப்படாத வயல்நிலங்களை உரிமையாளர்கள் 5 வருட காலத்திற்கு ஒதுக்கி மீண்டும் நடவு செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார். (நி)

## நெடுஞ்சாலைகளுக்கு செலவிட்ட பணத்தை

# பொதுப்போக்குவரத்திற்கு பயன்படுத்தியிருந்தால் இன்று நாடு நவீனமயமாகி இருக்கும்- சம்பிக்கரணவக்க

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் எரிபொருளை இறக்குமதி செய்வதில் இலங்கை கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்துவதால் ரயில் பயணிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் நெடுஞ்சாலைகளுக்குச் செலவழிக்கப்பட்ட பணத்தில் 10 % பொதுப் போக்குவரத்தற்குத் திருப்பியிருந்தால் இன்று நவீன மயமாகியிருக்கும் எனவும் குறிப்பிட்டார். (நி)

## — QR முறைமையினால் —

# எரிபொருள் இறக்குமதிக்கான செலவு 270 டொலராக குறைந்தது

(கொழும்பு)

QR அடிப்படையிலான தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் மாதாந்த எரிபொருள் இறக்குமதிக்கான செலவு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 230 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், வலுசக்தி அமைச்சு, QR குறியீட்டு அடிப்படையிலான ஒதுக்கீட்டு முறைமையின் கீழ் பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றமை அரசுக்கு பெரும் சேமிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வலுசக்தி அமைச்சின் கூற்றுப்படி, இதுவரை 6 மில்லியன் வாகனங்கள் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரங்களுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதே நேரத்தில் நாடு முழுவதும் உள்ள 93% எரிபொருள் நிலையங்கள் QR அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறைமையை செயற்படுத்தியுள்ளன. (நி)

# காலி கோட்டைக்கு வருவதில் தயக்கம் காட்டும் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

காலி கோட்டையை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் மின்வெட்டு காரணமாக பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக காலி கோட்டை பகுதியில் மின்வெட்டு இல்லாத நிலையில், சமீபகாலமாக காலி கோட்டையில் உள்ள வணிக ஸ்தலங்களில் இருமுறை சில மணி நேரம் மின்வெட்டு ஏற்படுவதால் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். (நி)

## காந்தி ஆச்சிரமத்தில்

# ராட்டையில் நூல் நூற்றார் சனத் ஜெயசூரிய



(மூல்லி)

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள சுற்றுலா மேம்பாட்டு தூதுவரான முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரிய மகாத்மா காந்தி நூல் நூற்ற ராட்டையில் நூற்றுள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பதிவில்,

மகாத்மா காந்தி ஆச்சிரமத்திற்குச் செல்வது மிகவும் எளிமையான அனுபவங்களில் ஒன்றாகும்.

அவருடைய வாழ்க்கை இன்றும் நம்மை ஊக்குவிக்கிறது. "நிகழ்காலத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பொறுத்தே எதிர்காலம் தங்கியுள்ளது". இது முன்னெப்போதையும் விட இலங்கைக்கு தற்போது பொருந்தும் என பதிவிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

23.08.2022
ஆவணி 07, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி காலை 7.40 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 12.59 மணிவரை
சுப நேரம் -10.35-12.05 மணிவரை
இராகு காலம் -3.05-4.35 மணிவரை
ஏகாதசி விரதம்,
சந்திராஷ்டமம்- அனுசம், கேட்டை
வளவன்




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வெற்றி தரும் செய்திகள் வீடு வந்துசேரலாம்.




உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழில் ரீதியான அலை ச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.




உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், மறைமுக எதி ர்ப்புகள் மாறும், உடல் நலன் சீராகும், செய் தொழிலில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்தி தரும்.




பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், நிதி நிலை உயர வழிவகை செய்வீர்கள், அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் கூடும்.




விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்துசேரலாம்.




எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகலாம், வழிபாட்டால் மன அமைதி காண வேண்டிய நாள்.




வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.




உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும் நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.




கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், செய்தொழிலில் ஆர்வத்துடன் கலந்து கொள்வீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள்.




குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.




எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ நீயாக இருக்கும் போது நீ மகிழ்ச்சியாக இருப்பாய்.



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### இரு சகோதரிகள்

உமாவும் லம்சுமியும் அக்கா தங்கைகள் இருவருக்கும் வயதிலும் அதிக வித்தியாசம் இல்லை இரண்டே வருடங்கள் தான். ஆனால் லட்சுமிக்குப் பொறாமையும் கர்வமும் மிக அதிகம். பொறுமை என்பதும் கிடையாது.

இருவரில் லட்சுமி அழகானவள். அவளைக் கண்டு ஒரு பணக்காரனின் மகன் மயங்கிக் கல்யாணம் செய்து கொண்டான். அதனால் உமாவின் கல்யாணமும் அதற்கு முன் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த வாலிபனோடு நடந்தது.

உமாவின் கணவர் பட்டணத்தில் அரசாங்க அலுவலகம் ஒன்றில் வேலை பார்த்து வந்தான். பார்க்க அழகாக இல்லாது போனாலும் விகாரமாக இருக்கவில்லை. அக்காவும் தங்கையும் கல்யாணம் ஆனதும் தம் கணவர்களோடு போய்க் குடித்தனம் ஆரம்பித்தார்கள்.

லட்சுமி எல்லா வசதிகளைப் பெற்றிருந்த போதிலும் உமாவின் குடித்தனம் எப்படி நடக்கிறது என்று அடிக்கடி விசாரித்துத் தெரிந்து கொண்டே இருந்தாள். உமா சந்தோசமாக இருக்கிறாள் என்பதைக் கேட்க அவளால் பொறுக்க முடியவில்லை.

ஒருநாள் அவள் தன் கணவரை அழைத்துக் கொண்டு உமாவின் வீட்டிற்குச் சென்றாள். உமாவின் வீடு மிகச் சிறியதே. வீட்டில் விலையுயர்ந்த பொருள் என்று எதுவும் இருக்கவில்லை. எல்லா விதத்திலும் உமாவிற்கு தனக்கு உள்ளது போல வசதிகள் இல்லை என்பதை லட்சுமி கண்டாள். இப்படி இருந்தும் உமா எப்படி சந்தோசமாக இருக்கிறாள் என்பதை லட்சுமியால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் கணவருக்கும் அது ஒரு புதிராகவே இருந்தது.

உமாவின் கணவர் மாலை வேளைகளில் இலக்கிய இசைப் பேருரைகளை நிகழ்த்தி வந்தார். அதைக் கேட்கப் பலரும் வந்தார்கள். வந்தவர்களெல்லாம் அவனை புகழவே அதனால் உமாவும் சந்தோசம் அடைந்தாள். இது அவர்களது மகிழ்ச்சிக்கு ஒரு காரணம் என்று லட்சுமி தன் கணவரிடம் கூறினாள்.

அன்று மாலை உமாவின் கணவர் இலக்கிய உரை நிகழ்த்திய போது லட்சுமியின் கணவர் அதற்குப் புதுப்புது அர்த்தங்களை கூறினான். அது கண்டு யாவரும் அவனது பாண்டித்தியத்தைப் பெரிதும் பாராட்டினார்கள். சிலர் அவனிடம் "நீங்கள் உங்கள் ஊரில் இம்மாதிரி இலக்கிய இசைப் பேருரைகள் நிகழ்த்துகிறீர்களா?" என்று கேட்டார்கள்.

அவனும் "நானும் இம்மாதி இசைப் பேருரைகளை நிகழ்த்த விரும்புகிறேன். ஆனால் நேரம் தான் இல்லை. வியாபாரத்தில் மூழ்கிவிடுவதால் பலர் என்னிடம் அது சம்பந்தமாய் யோசனை கேட்க வருகிறார்கள். லட்சக்கணக்கில் பணம் போட்டு வியாபாரம் செய்வது என்பது எளிதா? இந்த இலக்கிய அறிவு படித்தால் கிடைத்துவிடும். வியாபார அனுபவம் அப்படி இல்லையே" என்றான்.

பலர் "நீங்கள் சொல்வது சரி" எனவே உமாவின் கணவர் "இந்த இசைப் பேருரைகள் நிகழ்த்துவது எல்லாம் வேலை வெட்டி இல்லாமல் இருப்பவர்கள் செய்வது. இவருக்கு ஒவ்வொரு நிமிசமும் ஒரு லட்சம் ரூபாய்க்குச் சமம்" என்று லட்சுமியின் கணவரைப் புகழ்ந்தார்கள்.

உமாவிடம் பழங்கால விக்கிரகம் இருந்தது.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## நடந்தாழ் வாழி கண்ணகி

சாரணர்களிடம் கவுந்தி அடிகள் சொன்னதைக் கோவலன் கவனித்தான் யோசித்தான்.

இந்த மறைமுகப் பரிமாறலுக்கு அர்த்தம் என்ன?


நாம் அறியத் தேவையில்லாத விடயமாக இருக்கலாம். அறிந்து கொள்ளமுடியாத விடயமாக இருக்கலாம் துறவிகள் சம்பந்தப்பட்ட விடயமாக இருக்கலாம்.

ஒரு வேளை அறிந்து கொள்ளக்கூடாத விடயமாக இருக்குமோ?

அப்படியும் இருக்கலாம்.

அறிந்துகொள்வதில் என்ன தடை இருக்க முடியும்?

41



சில விடயங்கள் தெரிவதால் பயமும் வருத்தமும் உண்டாவதைத் தவிர வேறு பயன் எதுவும் இருக்காது அப்படிப்பட்ட விடயமாக இருந்தாலொழிய அதை இவர்கள் மறைக்க வேண்டிய அவசியமில்லை.

ஞானிகள் எல்லோரின் நிம்மதியையும் நல்வாழ்வையும் விரும்புகிறவர்கள்.

ஆகவே அது நமக்கு தெரியாமல் இருப்பதில் எந்த நட்டமும் இல்லை என்று முடிவு செய்து கொண்டான் கோவலன். அவர்கள் தொடர்ந்து நடந்தார்கள்.

சீரான வேகத்தில் நடந்து போய்க்கொண்டிருந்த அவர்கள் மரங்கள் அடர்ந்த ஒரு சோலையைப் பார்த்தும் வேகத்தைக் குறைத்தார்கள். நின்றார்கள்.

அங்கே இனிமையான நிழல் காற்று. அதையெல்லாம் ஒரு துளி அனுபவித்த பிறகு சீக்கிரம் கடந்து போய்விட யாருக்குதான் மனம் வரும்.

ஆனால் கவுந்தி அடிகளின் மனம் சோலையின் சுகத்தில் லயிக்கவில்லை.

அவருடைய கண்கள் எதையோ தேடின.

சில விநாடிகள் தான். 'அதோ' என்று அவர் காட்டியது ஓர் அருகப் பெருமான் கோயிலை.

'அசோக மரங்கள் நிறைய இருக்கும் போது அங்கே அருகப் பெருமான் ஆலயம் இல்லாமல் போகாது' என்று விளக்கமும் அவரே அளித்தார்.

அரச மரத்தடியில் இருக்கும் விநாயகர் போல அசோக மரத்தடியில் இருக்கும் அருகப் பெருமான் சமணர்களின் முதற்கடவுள்.

'வாருங்கள் இருவரும் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்பதற்கு நம்பிக்கையையும் பலத்தையும் தரவல்லவர் அருகப் பெருமான் அவரை வழிபடுங்கள்' என்று கண்ணகியையும் கோவலனையும் அழைத்தார் கவுந்தி அடிகள்.

நிஜம் தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 58

ஆனால், அவரது நீண்டகால போட்டியாளரான பெட்ரோ பொரோஷென்கோவை எங்கள் உக்ரைன் கட்சியில் இருந்து பாராளுமன்றத்தின் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்நிபந்தனை விதிக்கப்பட்டது. கூட்டணியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர் சபாநாயகராக வருவதற்கு தான் ஆதரவு அளிப்பதாக (வாக்களிப்பதாக) திமோஷென்கோ கூறினார்.

கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தான ஒரு சில நாட்களுக்குள், கூட்டணி உறுப்பினர்கள் ஒருவர் மீது ஒருவர் அவநம்பிக்கை கொண்டுள்ளனர் என்பது தெளிவாகியது. ஏனெனில், சபாநாயகராக பொரோஷென்கோவையும் பிரதம மந்திரியாக திமோஷென்கோவையும் ஒரே நேரத்தில் வாக்கெடுப்பு நடத்தி தெரிவு செய்வது பாராளுமன்ற நடைமுறைகளிலிருந்து விலகுவதாக அவர்கள் கருதினர்.

பிராந்தியங்களின் கட்சி, பாராளுமன்ற நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று கோரி கூட்டணிக்கு இறுதி எச்சரிக்கையை அறிவித்தது. பாராளுமன்றக் குழுக்களில் ஒவ்வொரு கட்சிக்கும் (பிரிவினருக்கும்) உள்ள இடங்களின் எண்ணிக்கை விகிதத்தில் இடங்களை (உறுப்பினர்களை) ஒதுக்க வேண்டும் என்று கோரியது. சில பாராளுமன்றக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் வெற்றி பெற்ற நிர்வாக மாநிலங்களின் (உட்பிரிவுகளில்) ஆளுநர் பதவிகள் பிராந்தியங்களின் கட்சிக்கு வழங்கப்படல் வேண்டும் என்று கூறியது. ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. பிராந்தியக் கட்சி, தமது கட்சிக்கும் மற்றும் கம்யூனிஸ்டுகளுக்கும் பாராளுமன்றக் குழுக்களில் நிர்வாக மற்றும் தலைமைப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விட்டது என்று புகார் கூறியதோடு பிராந்தியக் கட்சி உறுப்பினர்கள் 29 ஜூன் முதல் ஜூலை 6 வரை, பாராளுமன்றத்தை முடக்கினர்.

பாராளுமன்றத் தலைவராக மொரோஸ் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜூலை 6 ஆம் திகதி பிராந்தியங்களின் கட்சியின் எதிர்ப்பால் "ஆரஞ்சு கூட்டணி" சரிந்தது. இதனைத் தொடர்ந்து முன்னாள் பிரதம மந்திரி விக்டர் யானுகோவிச் பிராந்தியங்கள், சோசலிஸ்டுகள் மற்றும் கம்யூனிஸ்டுகள் கட்சிகளின் ஆதரவுடன் பிரதமரானார். இதை விரும்பாத திமோஷென்கோ தனது அரசியல் சக்தி புதிய அரசாங்கத்திற்கு எதிராக இருக்கும் என்று உடனடியாக அறிவித்தார்.

**ஒக்டோபர் 2006 இல் ஆளும் கூட்டணியில் இருந்த எங்கள் உக்ரைன் கட்சி எதிர்க் கட்சிப்பக்கம் தாவியது. நவம்பர் 2006 இல் எங்கள் உக்ரைன் கட்சியில் இருந்து பதவி வகித்த ஐந்து அமைச்சர்கள் பாராளுமன்றத்தால் நீக்கப்பட்டனர்.**

எங்கள் உக்ரைனால் திரும்பப் பெறப்பட்டனர். 2006 உக்ரைனிய அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து புதிய தேர்தல்கள் அழைக்கப்பட்டு 2007 இல் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

### உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தல்- 2007

2006 பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து, ஜனாதிபதிக்கும் பாராளுமன்ற பெரும்பான்மைக்கும் இடையே அதிகாரப் போட்டி நிலவியது. இதன் விளைவாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. தேசிய ஒற்றுமையின் கூட்டணி என அழைக்கப்படும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானது பிராந்தியங்களின் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோசலிஸ்ட் கட்சியால் உருவாக்கப்பட்டது. அதை யூலியா திமோஷென்கோ பிளாக் மற்றும் எங்கள் உக்ரைன் எதிர்த்தன.

2007 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கூட்டணிக்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர். இது பாராளுமன்றத்தில் தேசிய ஒருமைப்பாட்டின் கூட்டமைப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு வாய்ப்பளித்தது.

தேசிய ஒருமைப்பாட்டின் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றால் ஜனாதிபதியின் வீட்டோ உரிமையை மீறுவதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளித்து, மட்டுப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்களைத் தொடங்குவதற்கு பாராளுமன்றத்தை அனுமதித்திருக்கும். இதனை உணர்ந்த ஜனாதிபதி யுஷ்செங்கோ ஏப்ரல் 2, 2007 அன்று, பாராளுமன்றத்தைக் கலைக்க ஆணையிட்டார்.

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. இருப்பினும் அரசியலமைப்பு நீதிமன்றத்தின் செயற்பாட்டில் ஜனாதிபதியின் தலையீட்டைத் தொடர்ந்து, ஜனாதிபதியின் ஆணையின் அரசியலமைப்புத் தன்மை குறித்து நீதிமன்றம் தீர்ப்பளிக்கவில்லை.

தேர்தல் முதலில் 27 மே 2007 அன்று நடத்த திட்டமிடப்பட்டது, பின்னர் அது ஜூன் 24, 2007 க்கு ஒத்தி வைக்கப்பட்டது. இருப்பினும் 27 மே 2007 அன்று ஜனாதிபதி விக்டர் யுஷ்செங்கோ, பிரதமர் விக்டர் யானுகோவிச் மற்றும் பாராளுமன்ற சபாநாயகர் ஒலெக்சாண்டர் மோரோஸ் ஆகியோரால் ஒப்பந்தம் செய்யப்பட்டு 30 செப்டெம்பர் 2007 அன்று தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டது.

(தொடரும்)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் சோமாலியாவில் 40 பொது மக்கள் பலி

(மொகாதிசு)

சோமாலியாவில் தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் அரசுக்கு எதிராக அல்- ஷபாப் பயங்கரவாத இயக்கம் தாக்குதல் நடத்தி வருகிறது. அல்-கொய்தா ஆதரவு பெற்ற இந்த இயக்கம் இராணுவ வீரர்கள், பொலிஸார், பொது மக்களை குறி வைத்து அடிக்கடி தாக்குதல் நடத்துகிறது. தீவிரவாதிகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த நிலையில் தலைநகர் மொகாதிசுவில் உள்ள பிரபல நட்சத்திர ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் 40 பொது மக்கள் உயிரிழந்ததுடன் 70 பேர் காயம் அடைந்துள்ளனர். (நி)

# சிங்கப்பூரில் அமையும் உலகின் மிகப்பெரிய தானியங்கி துறைமுகம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் அமைத்து வரும் துவாஸ் துறைமுகம் இன்னும் 20 ஆண்டுகளில் உலகின் மிகப்பெரிய முழுமையான தானியங்கித் துறைமுகமாக இருக்கும் என அந்நாட்டு பிரதமர் லீ சியென் லூங் தெரிவித்தார்.

சிங்கப்பூர் தேசியதினக் கூட்ட உரையில் பேசும் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தத் துறைமுகம் சிங்கப்பூரை உலகளவில் கடற்றுறை யில் முன்னணி இடம் வகிக்கச் செய்யும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# உக்ரைன் அணுமின் நிலையம் மீதான தாக்குதல்களை ரஷ்யா நிறுத்த வேண்டும்

## உலக நாடுகள் கோரிக்கை


**(வோஷிங்டன்)**

**ஜாபோரிஜ்ஜியா அணுமின் உற்பத்தி நிலையம் மீதான தாக்குதல்களை ரஷ்யா உடன் நிறுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் தொடக்கம் பல நாடுகள் தனிப்பட்ட நிலையில் ரஷ்யாவிற்கு அறிவுறுத்தல்களை விடுத்து வருகின்ற போதிலும் ரஷ்யா எவற்றையும் செவிமடுக்காது தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.**

ரஷ்யா தொடர்ந்தும் அணுமின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள உக்ரைனின் 'ஜாபோரிஜ்ஜியா' என்னும் இடத்தைச் சுற்றிலும் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் நிலையில் உலக விஞ்ஞானிகள் தொடர் எச்சரிப்புக்களையும் விடுத்து வருகின்றனர்.

உக்ரைனில் மிகவும் ஆபத்தான நிலையில் காணப்பட்டு வருகின்ற ஐரோப்பாவின் பாரிய அணுமின் உற்பத்தி நிலையத்தின் பாதுகாப்பு மற்றும் செயற்பாடு குறித்து விவாதிக்க அமெரிக்க ஜனாதிபதி 'ஜோ பைடன்' உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த சந்திப்பின் மூலம் உக்ரைனின் அணு உலை நிலையத்தின் பாதுகாப்பு மற்றும் அதன் மீள் செயற்பாடுகள் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் ரஷ்யாவை எவ்வாறு அணு மின் நிலைய தாக்குதல்களில் இருந்து விடுவிப்பது என்பது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சல் நீடித்தால் இரத்தப் பரிசோதனை அவசியம்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு ஆலோசனை

**(கொழும்பு)**


**வாரம் ஒன்றுக்கு பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 1500 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

மேலும், இந்த வருடத்தில் இதுவரை டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 50,500 என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் கண்டி, காலி, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் கணிசமான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

டெங்கு, கொரோனா மற்றும் இன்புளுவென்சா ஆகியவை இந்த நாட்களில் பரவிவரும் நிலையில், அறிகுறிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுமாறும் அவர் மக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் முழுமையான இரத்தப் பரிசோதனையை மேற்கொள்வது அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)



# கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 66 பேர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 69 ஆயிரத்து 33 ஆக உயர்வடைந்துள்ளதோடு 4 கொரோனா மரணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனால் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு

# பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் பாதிக்கப்படும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், மீன்பிடி மற்றும் பெருந்தோட்டத் துறைகளுக்கு அதற்கு இணையாக நேரடி நிதி நிவாரணத்தை வழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.



மின்சக்தி வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டர் பதிவொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

மானிய விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டமை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைவதற்குரிய ஒரு காரணியாகும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலையை 87 ரூபாவில் இருந்து 340 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நாடு திரும்புவது குறித்து கோட்டாவை தொடர்பு கொண்ட ஜனாதிபதி



(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருடன் கலந்துரையாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பின்னணியிலேயே இம்மாதம் திட்டமிடப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவின் வருகை பிற்போடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் எதிர்ப்பை அடுத்து மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் சென்று கோட்டாபய ராஜபக்ஷ ஜூலை மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்தார்.

இதனை அடுத்து கோட்டாபய ராஜபக்ஷ தாய்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள நிலையில் அவர் மீண்டும் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் மிரிஹானவில் உள்ள அவரது இல்லம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிக விலைக்கு முட்டை விற்றால் 50 இலட்சம் அபராதம்

(கொழும்பு)

அரசாங்கம் நிர்ணயித்த விலை வரம்புகளுக்குட்பட்டு முட்டைகளை விற்பனை செய்யாத அனைத்து வர்த்தகர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

முட்டைகளை அதிக விலைக்கு விற்றால் ஒரு தனியார் நிறுவனத்துக்கு குறைந்தபட்ச அபராதம் 5 இலட்சம் ரூபாவும் அதிகபட்ச அபராதமாக 50 இலட்சம் ரூபாவும் 6 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம் என்றும் நுகர்வோர் அதிகார சபைத் தலைவர் சாந்த கிரியெல்ல தெரிவித்தார்.

வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச விலை 43 ரூபாவாகவும் சிவப்பு முட்டை ஒன்றின் விலை 45 ரூபாவாகவும் நிர்ணயித்து அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 450 |
| தக்காளி | 400 | 300 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 240 |
| கோவா | 350 | 400 | 400 | 440 |
| கரட் | 300 | 320 | 350 | 400 |
| பூசணி | 130 | 100 | 120 | 340 |
| புடோல் | 100 | 120 | 120 | 180 |
| வாழைக்காய் | 150 | 160 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 450 | 350 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 180 | 220 | 200 | 200 |
| பயற்றங்காய் | 200 | 140 | 120 | 120 |
| லீக்ஸ் | 300 | 250 | 180 | 300 |
| பீற்றூட் | 160 | 160 | 160 | 180 |
| கறிமிளகாய் | 600 | 800 | 700 | 700 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 600 | 600 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 350 | 380 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 65 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 140 | 120 | 280 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 25 | 100 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 120 | 140 |

# பாராளுமன்றம் கலைக்கும் காலத்தை 2 1/2 வருடங்களாக குறைக்க கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தை இரண்டரை வருடங்களில் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்குவது தொடர்பில், 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சரத்தை திருத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

50 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கோரிக்கையில் கையொப்பமிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் பொதுஜன பெரமுன மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தைக் கலைக்கும் யோசனையை நான்கரை வருடங்களில் இருந்து இரண்டரை வருடங்களாக மாற்றுமாறு இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச் சாட்சியைக் கொல்லக் கூடாது.
அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்!.
– சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துங்கள்!

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தமிழ்த் தலைவர்களும் கைகோர்க்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

இது இலங்கையின் ஆட்சித் தலைவர்களின் ஒரு சம்பிரதாயமான கருத்து என்பதோடு அதனை அப்படியே விட்டு விடலாம்.

உண்மையில் இந்த நாட்டின் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறுவதை சிங்கள அரசியல் தரப்புகள் வழமையாக்கியுள்ளன.

மாறாக, தேர்தல் முடிந்து ஆட்சிக்கு வந்ததும் இனப்பிரச்சினை என்ற எதுவும் இங்கு கிடையாது என்று கூறிவிடுவர்.

இந்த வழமையின் அடிப்படையில், இப்போது நாடு கந்தறுந்து கிடப்பதன் காரணமாக, நாட்டை மீட்டெடுக்கத் தமிழ்த் தலைவர்களும் கைகோர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி ரணில் மேலதிகமாகச் சேர்த்துள்ளார்.

இதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த நல்லாட்சியில் பிரதமராக இருந்த போது தமிழ் மக்களின் விடயத்தில் எதுவும் செய்யவில்லை.

நல்லாட்சி ஏற்படுவதில் தமிழ் மக்களின் பங்கு காத்திரமாக இருந்த போதிலும் அதனைப்பொருட்படுத்தாமல் ரணில் செயற்பட்டார்.

இங்குதான் தமிழ் அரசியல் தலைவர்களின் சுயநலப்போக்கு தமிழ் மக்களின் வாழ்மானமாகி விட்டதை உணரமுடியும்.

ஆம், நல்லாட்சி அரசு அமைவதற்கு ஆதரவு வழங்கிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நல்லாட்சி அரசாங்கத்தைக்கொண்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைச் செய்யவோ அன்றி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதி விசாரணை நடத்தவோ முயற்சிக்கவில்லை.

மாறாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொண்டதோடு மௌனமாக இருந்து விட்டார்.

ஆக, இனப்பிரச்சின்னக்குத் தீர்வு காணப்படும் என்று போலி வாக்குறுதி அளித்து காலத்தைக் கடத்தி, தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற சிங்கள ஆட்சியாளர்களிடம் தங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதில் தமிழ் அரசியல் தரப்புகள் முனைப்புக் காட்டினவே தவிர,

எங்கே? தேர்தலின் போது நீங்கள் அளித்த வாக்குறுதி. அதை நிறைவேற்றாமல் விட்டது எதற்காக? என்று உரக்கக் குரல் கொடுப்பதற்கு நம் அரசியல் தலைவர்கள் முன்வரவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நாட்டை மீட்டெடுப்பதாக இருந்தால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே ஒரே வழி என்று தமிழ் அரசியல் தலைவர்கள் ஆணித்தரமாகக் கூறவேண்டும்.

ஆம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாதவரை, பொருளாதார நெருக்கடிகளில் இருந்து இலங்கையை மீட்க முடியாது என்ற உண்மையை உலகமெல்லாம் உரக்கக் கூறுவது தமிழ் அரசியல் தரப்புகளின் தலையாய கடமை.

எனினும் அது எதுவுமே நடப்பதாகத் தெரியவில்லை. மாறாக, சர்வகட்சி அரசாங்கத்தை ஆதரிப்போம் என்ற செலுட்டுத்தனமான அறிக்கைகள் மட்டுமே தமிழ் அரசியல் தரப்பின் எதிர்வினையாக இருக்கிறது எனும் போது, இதைவிட்ட அநியாயம் வேறு எதுவுமாக இருக்கமாட்டாது.

# நல்லூர் ஆலய வளாகத்தை அசுத்தப்படுத்துவதை தவிருங்கள்

## ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில், மாலை திருவிழாவிற்கு வரும் சிலர் ஆலய வீதிகளில் தாம் உண்ட உணவுகளின் மீதிகள், கச்சான் கோதுகள், காரம் சுண்டலை சாப்பிட்ட மீதி பைகள் என்பவற்றை வீசி எறிகின்றனர். சிலர் அவற்றை மணல் மண்ணுக்குள் புதைத்தும் விடுகின்றனர். அதனால் ஆலய வீதிகள் அசுத்தமாக காணப்படுகின்றன.

குறித்த செயற்பாடு ஆலய வீதியில் அங்க பிரதிஷ்டை செய்யும் அடியவர்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆலய சுற்று வீதிகள் யாழ்.மாநகர சபை சுத்திகரிப்பு பணியாளர்களால் தினமும் இரவு வேளைகளில் சுத்தம் செய்யப்படுகின்றது.

அவ்வாறு அவர்கள் சுத்தம் செய்யும் போது வீதிகளில் வீசப்பட்ட கச்சான் கோது, மிகுதி உணவுடன் வீசப்பட்ட பைகள் என்பன மணலில் புதைத்து காணப்படுவதனால் சுத்தம் செய்யும் போது சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை ஆலயத்திற்கு மாலை வேளைகளில் வரும் ஒரு சில இளைஞர் குழுக்கள் அதிக சத்தம் எழுப்பும் கோரன்களை மக்கள் மத்தியில் ஊதி செல்கின்றனர்.

வயதானவர்கள், குழந்தைகள் மத்தியில் அதிக ஒலி எழுப்ப கூடிய அந்த கோரன்களை ஊதி செல்வதனால் பலரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

அத்துடன் ஆலய சூழலில் யாசகம் பெறும் சிலர் மது போதையில் யாசகம் பெற்று வருவதுடன் ஆலயத்திற்கு செல்வோருக்கு இடையூறுகளையும் விளைவித்து வருகின்றனர்.

இவ்வாறு ஆலயத்திற்கு வருவோருக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக செயற்படுவோருக்கு எதிராக பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரியுள்ளனர். (4-18-33)

# கட்டுப்பாட்டு விலையை மீறி யாழில் முட்டை விற்பனை

(குப்பிழான்)

கோழி முட்டைக்கு கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் கட்டுப்பாட்டு விலை விதித்து பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கட்டளை பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில் வெள்ளை முட்டை 43 ரூபா, பழுப்பு/சிவப்பு நிற முட்டை 45 ரூபா எனும் கட்டுப்பாட்டு விலையை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக வர்த்தமானி அறிவித்தலுக்கு அமையச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபை அறிவித்துள்ளது.

எனினும், கட்டுப்பாட்டு விலையை மீறி யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் நேற்றுத் திங்கட்கிழமையும் 58 ரூபா, 60 ரூபா ஆகிய அதிகரித்த விலைகளுக்கு கோழி முட்டை விற்பனை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பல வர்த்தக நிலையங்களில் கோழி முட்டை விற்பனை இடம்பெறவில்லை.

திடீர்க் கட்டுப்பாட்டு விலையால் தாம் குழப்பத்தில் உள்ளதாகத் தெரிவித்து நுகர்வோர் வர்த்தகர்களால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதேவேளை, கோழி முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளமையால் யாழ்.மாவட்டத்தில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோழித் தீவனங்களின் விலைகளைக் குறைக்காமல் இவ்வாறு கட்டுப்பாட்டு விலையை அரசாங்கம் நிர்ணயித்துள்ளமை தொடர்பில் விசனம் வெளியிட்டுள்ள அவர்கள் அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டு விலைக்குத் தம்மால் முட்டைகளை விற்பனை செய்ய முடியாது உள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர். (4-18)

# பொருளாதார நெருக்கடிய்யத் தீர்ப்பதாகக் கூறி அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடாது

## சமத்துவக்கட்சி

(கிளிநொச்சி)

ஜனநாயக ரீதியில் போராடுவோரை அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களால் சிறையில் அடைப்பது தவறு. அப்படிச் செய்தால் அது நாட்டில் மிக மோசமான எதிர் விளைவுகளையே உண்டாக்கும். பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதாகக் கூறிக் கொண்டு மறுவளத்தில் அரசியல் நெருக்கடியை உருவாக்கக் கூடாது. அப்படிச் செய்தால் அதற்காக மிகப் பெரிய விலையை நாடு செலுத்த வேண்டியிருக்கும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ரீதியில் போராடியவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பில் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, ஜனநாயகப் போராட்டங்களுக்கு இடமளித்தால் வன்முறைச் செயற்பாடுகளோ அதற்கான சூழலோ உருவாகாது. ஆகவே அரசாங்கம் அத்தகைய தவறுகளுக்கு இடமளிக்காமல், செயற்படுவது அவசியமாகும். எனவே ஜனநாயக வழியில் போராடியோரைச் சிறையில் அடைத்துப் பழிவாங்குவதை விடுத்து உரியவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

அவர்கள் மக்கள் நிலை நின்று பகிரங்கமாக முன்வைத்த கோரிக்கைகளின் நியாயத் தன்மையைப் புரிந்து கொண்டு நாட்டின் நெருக் கடியைத் தீர்ப்பதே மிகப் பொருத்தமான வழிமுறையாகும்.

எந்த மக்கள் போராட்டத்தின்போதும் மக்கள் மிக உணர்ச்சிகரமாகவே செயற்படுவர் என்பது உலகளாவிய அனுபவமாகும். அதுவே இங்கும் நிகழ்ந்துள்ளது.

தாம் சந்திக் கின்ற நெருக்கடிகளுக்கு காரணமான ஊழல், அதி கார துஷ்பிரயோகம், முறையற்ற திட்டமிடல்கள் போன்றவற்றுக்குப் பொறுப்புடையவர்கள் எனக் கருதியே சிலருடைய உடைமைகளை அவர்கள் அழிக்க முற் பட்டனர்.

இது தவறாக இருந்தாலும் மக்களுடைய இத்தகைய உணர்ச்சி நிலையின் தன்மை இப்படித்தானிருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே வேளை இவை எதுவும் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்ச்சியாக நடைபெறவில்லை என்பதை இந்தச் சம்பவங்களைக் கூர்மையாக அவதானித்தால் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே மக்கள் போராட்டத்தின் போது நடந்த உணர்ச் சிகரமான விடயங்களை அதே உணர்ச்சிகரமான நிலையில் அரசாங்கமும் அணுக முற்படுவது பொருத்தமானதுமில்லை. புத் திசாலித்தனமானதும்அல்ல. அப்படிச் செய்தால் அது மேலும் பல நெருக்கடிகளை உண்டாக்கும்.

இந்த அரசாங்கம் நெருக்கடிகளைத் தீர்ப்பதிலேயே அதிக கரிசனையைக் கொண்டுள்ளதாக நாம் நம்புகிறோம்.

அப்படியிருக்கும் போது அதற்கு எதிர் வளமாக எந்தக் காரணம் கொண்டும் நெருக்கடிகளை உருவாக்குவதாக எந்த நடவடிக்கையும் அமையக்கூடாது என்று வலியுறுத்துகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுபோக அறுவடைக்கு டீசல் பெற்றுத் தரவும்

## கிளிநொச்சி விவசாயிகள் கவனயீர்ப்பு

(கிளிநொச்சி)

**சிறுபோக அறுவடைக்கு டீசல் பெற்றுத்தருமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன் கிளிநொச்சி விவசாயிகள் நேற்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.**



இதன்போது அங்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சிறிமோகன் விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட தரப்புடன் பேசி விரைவான நடவடிக்கை எடுப்பதாக அவர் விவசாயிகளிடம் தெரிவித்தார்.

அறுவடைக்குத் தேவையான டீசல் கிடைக்காதவிடத்து, தாம் காலபோக செய்கையை மேற்கொள்ளப் போவதில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதன்போது ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் சிவமோகன் தெரிவிக்கையில்,

சிறுபோக அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், தேவையான டீசல் கிடைக்கவில்லை. கடந்த சில நாட்களாக மாவட்டத்திற்கு டீசல் கிடைக்கப் பெறவில்லை.

இந்த நிலைமையில் விவசாய செய்கைகளை கால்நடைகள் சேதமாக்கும் அபாயம் காணப்படுகின்றது. இந்த நிலையில், குறித்த அறுவடையை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

அதற்குத் தேவையான எரிபொருளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறுபோக செய்கை முழுமையாக நிறைவு செய்ய முடியாத எமது விவசாயிகள், கால போக செய்கை தொடர்பில் பரிசீலிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (4-100-316)

# அரசியல் உரிமையை வலியுறுத்தி குருநகரில் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் சிறுபான்மையின மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் 100நாள் செயல்முனைவுப் போராட்டத்தின் 22 ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை குருநகர் இறங்குதுறைப் பகுதியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர் பங்கேற்றிருந்தனர். (4-30)

# மேலும் எட்டு பேர் தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார்)

பொருளாதார நெருக்கடியால் யாழ்., மன்னாரைச் சேர்ந்த மேலும் 8 பேர் அகதிகளாக நேற்று திங்கட்கிழமை அதிகாலை தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

தனுஷ்கோடி சென்ற அவர்கள் தாங்களாக ஆட்டோவில் ஏறி மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்திற்கு சென்றனர்.

மத்திய, மாநில உளவுத் துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பிறகு 8 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

மேலும் தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 149 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (4-285)

# சேவை நேரம் நீடிப்பு

(கரணவாய்)

கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க (நெல்லியடி) எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சேவை நேரம் நீடிக்கப் பட்டுள்ளது. அந்தவகையில் காலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை நிரப்பு நிலையம் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-60)

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் வவுனியாவில் ஆரம்பம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் அண்மைக்காலமாக பெய்த மழையினால் டெங்கு நுளம்பு பெருக்கம் அதிகரித்து காணப்படுகின்றதையடுத்து பொதுமக்கள் இருப்பிடங்கள், பாடசாலைகள், அரச திணைக்களங்கள் அனைத்திலும் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

நேற்று இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் நிறுவனங்கள், வங்கிகள், விருந்தினர் விடுதிகள், உணவகங்கள், பொதுமக்கள் இருப்பிடங்கள் என்பவற்றில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு டெங்கு குடம்பி நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் தமது இருப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள், வங்கிகள், அரச நிறுவனங்கள் என்பனவற்றை துப்பரவு செய்து டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த வரும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி இருப்பிடங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டால் சிவப்பு எச்சரிக்கை ஒட்டப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மேலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (4-299)

# பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறும் என பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை அறிவித்துள்ளது. இதன்போது ஆலய வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மற்றும் சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் திருவுருச்சிலைகள் திறந்து வைக்கப்படவுள்ளன. (4)

# திருடப்பட்ட பசுமாடு உரியவரிடம் ஒப்படைப்பு

(குப்பிழான்)

திருடிச் செல்லப்பட்ட பசுமாட்டைக் கொண்டு சென்ற இருவர் தப்பியோடிய நிலையில் குறித்த பசு பாதுகாப்பாக மீட்கப்பட்டு பசுவின் உரிமையாளரிடம் ஒப்படைத்த சம்பவம் யாழ். தென்மராட்சி மீசாலையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு மீசாலை வடக்கு எல்லை வீதியால் பசு மாடொன்றை இருவர் சேர்ந்து நடத்திக் கொண்டு செல்வதைக் கண்ட ஊரவர்கள் யாருடைய மாடு? எங்கே கொண்டு போகிறீர்கள்? என விசாரித்துள்ளனர்.

இந்நிலையில் இருவரும் சரியாகப் பதிலளிக்காமல் பசுமாட்டைக் கைவிட்டுச் சைக்கிளில் ஓடித் தப்பியுள்ளனர்.

பசு மாட்டைப் பிடித்த ஊரவர்கள் இதுதொடர்பில் கொடிகாமம் பொலிஸாரிற்குத் தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் குறித்த பசுமாட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

பின்னர் குறித்த பசுமாடு தன்னுடையது எனவும், திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து மந்துவிலைச் சேர்ந்த பெண் ஒருவர் மறுநாள் சனிக்கிழமை காலை கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று உரிமை கோரியுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணிடம் பசுமாடு ஒப்படைக்கப் பட்டது. (4-18)

# வர்த்தக நிலையத்தில் திருட்டு பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி மந்திகைப் பகுதியில் வர்த்தக நிலையமொன்றில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அண்மையில் பருத்தித்துறை நகர்ப் பகுதியில் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில் மந்திகையிலும் வர்த்தக நிலையம் ஒன்றில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த நிலையத்தை காலை வர்த்தக நடவடிக்கைகளுக்காக உரிமையாளர் திறந்து பார்த்த போது கூரை பிரிக்கப்பட்டு திருடப்பட்ட சம்வத்தை அவதானித்த வர்த்தக நிலைய உரிமையாளர் உடனடியாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

குறித்த திருட்டுச் சம்பவத்தில் சுமார் 70 ஆயிரம் பெறுமதியான உணவுப் பொருட்கள் மற்றும் பணம் என்பன காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்டம்பரில்...

கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் இயல்பு நிலை காரணமாக இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி காரணமாக மாணவர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களின் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டதன் காரணமாக அரச பல்கலைக்கழகங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## இந்திய...

முக மீனவர்கள் 10 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே முல்லைத்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை நேற்று பகல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 10 மீனவர்களையும் அவர்கள் பயணித்த விசைப் படகுடன் திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கடற்படையினர் கொண்டு சென்றனர்.

10 மீனவர்களும் விசாரணைகளின் பின்னர் இன்று காலை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (4-7)

## நாட்டை பாரிய...

சிக்கலான இடத்தை நோக்கி தள்ளப்படும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் மூலம் நாட்டின் ஜனநாயகம் மாத்திரமல்லாது மனித உரிமைகள் எதுவும் இருக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு நான் சில திருத்தங்களை முன்வைத்தேன். முழு சட்டமூலமும் மீளாய்வு செய்யப்படும் வரை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அவசரப்பட வேண்டாம்.

அடுத்த இரண்டு வாரங்களில் ஜெனிவாவில் மனித உரிமை பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாக உள்ளது. செப்டம்பர் 12 ஆம் திகதி இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச்சுவார்த்தைக்கு தயாராகி வருகிறது.

ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை எமது நாட்டின் ஏற்றுமதிக்கு நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால், இந்த அனைத்து துறைகளும் பாதிப்புக்கு உள்ளாகும் என மேலும் தெரிவித்தார். (4-7)

## வன்முறைகளு...

கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

"ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப் படுமாயின் வன்முறைகளுக்கு பொறுப்பானவர்கள் தொடர்பில் சாட்சியங்களுடன் தகவல்களை வழங்கத் தயார்.

வன்முறைகள் ஏற்படக்காரணம், அவற்றின் பின்னணியில் இருந்தது யார்? என்பதை கண்டறிய உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு நாங்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்" என மேலும் தெரிவித்தார். (4-7)

## பயங்கரவாத சட்...

தம்ம தேரர் மற்றும் அசந்த ஐயந்த குணதிலக ஆகிய மூவரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தில் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அனுமதி கோரியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மூவரையும் விசாரணை செய்வதற்கான அனுமதி வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (4-7)

## ஜனாதிபதியின்...

தெரிவித்தது.

அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அரசாங்கத்தில் இணையுமாறு ஜனாதிபதியால் எதிர்க்கட்சித் தலைவரிடம் மீண்டும் வலியுறுத்தப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது எனினும் அதனை நிராகரித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமது கட்சி அமைச்சுப் பதவி

களை ஏற்காமல் சர்வ கட்சி அரசாங்க வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதாக ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். (4-7)

## 10 இலட்சம் ரூபா...

விடப்பட்ட போது கடும் போட்டிகளுக்கு மத்தியில் சபரிராஜன் என்ற மாணவன் அவற்றை 10 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்துள்ளார்.

கிராமப்புற ஆலயம் ஒன்றில் இவ்வாறு பெரிய தொகைக்கு மாம்பழங்கள் ஏலம் எடுக்கப்பட்ட சம்பவம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

குறித்த ஏலத்தொகை குறித்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (4-7,299)

## பேக்கரி உற்பத்தி...

பேக்கரி உற்பத்திக்கான மூலப்பொருட்களின் விலை குறைவடைந்தும் பாண் உட்பட ஏனைய உற்பத்தி பொருட்களின் விலை குறைக்கப்படாமல் இருப்பது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பேக்கரி உற்பத்தி பொருட்களுக்கு தேவையான பிரதான மூலப்பொருட்களான மா, சீனி, மாஜரின் மற்றும் முட்டை ஆகியவற்றின் விலை பாரியளவில் குறைவடைந்துள்ளதால், அதன் நன்மையை பேக்கரி உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுத்தால் பாண் விலையை குறைக்கலாம்.

எனவே இந்த விடயத்தில் அரச மற்றும் அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்குமானால் 190 ரூபா என்ற அதிக விலைக்கு விற்பனையாகும் 400கிராம் கொண்ட ஒரு இறாத்தல் பாணின் விலையை 50 ரூபாயாலும் 100ரூபாயுக்கு விற்பனையாகும் பணிஸ் 25ரூபாயாலும் அதேபோன்று ஏனைய பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை குறிப்பிடத்தக்களவிலும் குறைக்க முடியும் என தெரிவித்தார். (4-7)

## கொரோ...

பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட இரு ஆண்களும் பெண் ஒருவரும் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உயிரிழந்த மற்ற மூவரும் 60 வயதுக்கு மேற்பட்ட மூன்று பெண்களாவர்.

இதேவேளை, நேற்று மேலும் 103 கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 669,136 ஆக அதிகரித்துள்ளது. (4-7)

## இலங்கையுடன்...

எது.

இதனிடையே மின்சக்தி மற்றும் வலுசக்தி ஆகிய இரு துறைகளிலும் அதானி உள்ளிட்ட நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாக த. இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2022/08/22
சீட்டிழுப்பு இலக்கம் 4855
C 5 0 8 0 9 1

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2022.08.22
சீட்டிழுப்பு இலக்கம் 164
தனுசு 03 15 24 37 தனுசு

மெகா பவர்
திகதி 22/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1203
I 18 15 22 49 71

கொவிசெத
திகதி 2022.08.22 சீட்டிழுப்பு இலக்கம் 3097
Y 01 50 62 64

தன நிதானய
திகதி - 2022.08.22
சீட்டிழுப்பு இலக்கம் - 885
T 09 24 31 37

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1312
ரிஷபம் 1 7 3 6 2 9

அத கோடிபதி
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1656
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.08.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,361,260/-
14 33 39 50 J

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.08.22
சீட்டிழுப்பு இல: 3991
வர்ணம்: நீலம்
ரூ. 4,187,900/-
18 19 49 68 D

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,561,951/-
திகதி 2022-08-22
வெற்றி வாரம் 3542
வர்ணம் மஞ்சள்
03 16 54 62
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,832,120/-

லக்கி 25
V 25 04 09 12 69
சீட்டிழுப்பு வாரம் 1006
2022.08.22 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 255,343,999/-

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1846
சீட்டிழுப்பு திகதி 2022-08-22
19 21 28 45 E
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 34,800,048/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1830
சீட்டிழுப்பு திகதி 2022.08.22
நிறம் ஊதா
தினம் திங்கட்கிழமை
W 25 39 48 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,328,920/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத...

பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற சர்வதேச மனித உரிமைகள் தரங்களுக்கு இணங்காத சட்டங்களைப் பயன்படுத்துவது இலங்கையில் ஜனநாயகத்தை சிதைக்கிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை மதிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிப்பதாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சமீபத்தீய கைதுகளில் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டமை குறித்து கரிசனை கொண்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை தற்போது பயன்படுத்துவதில்லை என இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய தகவலை ஆராய்ந்து வருகின்ற தரு ணத்தில் பயங் கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவது குறித்த தகவல் வெளியாவதாக ஐரோப்பிய ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது. (4-7)

## முல்லை.வட்டுவாகலில் இன்று காணி அளவீடு

முல்லைத்தீவு, வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாம் அமைந்துள்ள காணிகளை நில அளவை செய்யும் செயற்பாடு இன்று இடம்பெறும் என நில அளவை திணைக்களத்தால் காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட்டுவாகல் பகுதியில் பொதுமக்களின் காணிகளில் அடாத்தாக அமைக்கப்பட்டுள்ள "கோட்டாபய கடற்படை கப்பல்" என்னும்கடற்படை முகாமுக்கு காணிகளை நிரந்தரமாக சுவீகரிக்கும் நோக்கோடு நில அளவை செய்யும் செயற்பாடு தொடர்ச்சியாக பல தடவைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோது மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் எதிர்ப்பு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## இலங்கையில் விரைவில் மின்சார பஸ், ஆட்டோ

(கொழும்பு)

இலங்கையில் மின்சார முச்சக்கரவண்டிகள் மற்றும் பஸ்களை துரிதமாக அறிமுகப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் UNDP நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான முச்சக்கர வண்டிகள் உள்ளதாகவும் அந்த முச்சக்கரவண்டிகளை மின்சாரத்தில் இயங்கும் வகையில் மாற்றுவதன் மூலம் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதுடன், மலிவு விலையில் பயணிகள் பயணிக்கும் வசதியையும் ஏற்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முழு திட்டத்திற்கும் UNDP நிறுவனம் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக கொழும்பு நகரில் மின்சார பஸ் சேவையை ஆரம்பிக்கவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (4-7)

## ரூபவாஹினிக்குள் நுழைந்த மற்றுமொருவர் கைது!

(கொழும்பு)

சோஷலிச மாணவர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் ரங்கன லக்மால் தேவப்பிரிய கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாணவ செயற்பாட்டாளர் நேற்று காலை கருவாத் தோட்டம் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையானதாக சோஷலிச மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் ரங்கன லக்மால் தேவப்பிரிய கொழும்பு கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின்போது இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன வுளாகத்திற்குள் பலவந்தமாக நுழைந்த 2ஆவது நபரான சமிந்த கெலும்பிரிய அமரசிங்கவும் கைது செய்யப் பட்டுள்ளார்.

சமிந்த கெலும்பிரிய அமரசிங்க, காலிமுகத்திடல் போராட்டக்காரர் டனிஷ் அலியுடன் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது ரூபவாஹினி வளாகத்திற்குள் பலவந்தமாக நுழைந்தார். (4-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4777)

076 825 7716 (ஆகாஸ்)



மணிவிழா வாழ்த்து

23.08.2022





திருமதி பாமா
தெய்வேந்திரராஜா
(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

எம் ஒவ்வொருவருக்குமாய்
நோன்பிருந்து கால நேரம் பாராது
விழித்திருந்து பணி செய்து
எம்மைப் பாதுகாக்கும் அன்னையே
உன்னை ஒறுத்து
எங்களை உயர்த்திவிட்ட தாயே
நீடூழி வாழ்க.

தெல்லுளுவை,
வல்வெட்டி. (12497)

வாழ்த்துவோர்:- கணவர்
பிள்ளைகள், மருமகள்



பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-4778)

எமது கிளைகள்

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -30,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4778)

• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



BIOLOGY CLASSES
(Group)
(பிரபல்ய பாடசாலை ஆசிரியர்)
English & Tamil Medium
A/L 24 & 23 Batch
Con - 077 621 1056 (C-4776)



காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 06 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில். ❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
❖ யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029 (12525)



13 YEARS 2009 - 2022 ANNIVERSARY

ESOFT
Shaping Lives, Creating Futures.

13 வது ஆண்டில்
வெற்றிகரமாக தடம் பதிக்கும் யாழ் வளாகம்
இலங்கையின் மிகப்பிரசித்திபெற்ற தனியார் உயர் கல்வி நிறுவனமான
ESOFT METRO CAMPUS இனது
யாழ் வளாகம் கடந்த 12 வருட காலத்தில் எமது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது
மனமார்ந்த நன்றிகள் !!!

ESOFT METRO CAMPUS - JAFFNA | No.137, K.K.S Road, Jaffna | 0217 572 572 (C-4779)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.